# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 03 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## பாரதியார் சுயசரிதை

1. பாரதியார் சுயசரிதை அவரின் எப்பகுதியில் இடம்பெற்றது? அவரின் முப்பெரும் இலக்கியங்களும் எவை?

2. **“ விலங்கு இயற்கை இல்லை எனில் யாமெலாம்**
   **விரும்பு மட்டினில் விண்ணுறல் ஆகுமே...**
   அ. விலங்கு இயற்கை என்பதன் பொருள் யாது?
   ஆ. விண்ணுறல் என்பதன் கருத்து யாது?

3. **“ நீரெடுத்து வருவதற்கு அவள் மணி**
   **நித்திலப் புன்னகை சுடர் வீசிடப் போர்…**
   அ. நித்திலம் என்பதன் பொருள் யாது?
   ஆ. இங்கு வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

4. **“ பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலன்**
   **அழிந்து ஒரு புத்துயிர் எய்துவேன்...**
   அ. வதனம் என்பதன் பொருள் யாது?
   ஆ. இங்கு வெளிப்படும் உணர்வு யாது?

5. **“ யாத்த தேர் உருளைப்படு மேழைதான் யாண்டு**
   **தேர்செலும் ஆங்கு இழுப்புற்று என...**
   அ. மேழை என்பதன் பொருள் யாது?
   ஆ. யாத்த தேர் என்பதனை விளக்குக?

6. **“ புலங்களோடு கரணமும் ஆவியும் போந்து**
   **நின்ற விருப்புடன் மானிடன்...**
   அ. புலங்கள் எனக் கருதப்படுவது?
   ஆ. இங்கு கரணம் எனக் குறிக்கப்படுபவை?

7. **“ஆடுபோல் தாவித் தாவி பலபொருள் நாடுவோர்**
   **வீழும் ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுவோர்...**
   அ. ஆடு போல் தாவித் தாவி பல பொருள் நாடுவோர் என்பதன் கருத்து.
   ஆ. இங்கு வெளிப்படும் அணி யாது?

8. **‘‘விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்**
   **வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பர்**
   அ. இக்கூற்றை கூறியவர் யார்?
   ஆ. வெகுளி என்பதன் பொருள் யாது?

9. **“ கதிகள் யாவும் தருமென ஓர்ந்திடார்**
   **கண்ணில்லாதவர் போல திகைப்பர் காண்...**
   அ. கதி என்பதன் பொருள் யாது?
   ஆ. உவமையணினை குறிப்பிடுக?

**10. “ மதியினில் புலை நாத்திகம் கூறுவர்**
**மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே...**
அ. மதி என்பதன் கருத்து யாது?
ஆ. நாத்திகம் என்பதன் விளக்கம் யாது?

**11. “ தாழும் உள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல்**
**தாவித் தாவி பலபொருள் நாடுவோர்**
அ. இங்கு ஆட்டின் செய்கை யாருக்கு உவமிக்கப்பட்டுள்ளது.
ஆ. முயற்சி அற்றவர்கள் இயல்புகள் இரண்டினை தருக.

**12. ஒருவர் தாம் விரும்பியதை அடைவதற்கான வழிமுறைகள் எவையென பாரதியார் கூறுகிறார்?**

**13. பாரதியர் காட்டும் சிறுமியின் அழகு வெளிப்பாட்டினை எடுத்துரைக்குக?**

**14.ஒருவர் தாம் விரும்பியவற்றை அடைய முடியாமல் போவதற்கான காரணங்கள் எவை? என பாரதியார் கூறுகின்றார்.**

**15. பாரதியாரின் காதல் உணர்வு/மாசில்லாத பிள்ளைக் காதல் பற்றி எடுத்துரைக்குக?**

**16. பாரதியார் சுயசரிதையில் அணி வெளிப்பாடு பற்றி எடுத்துரைக்க.?**

**17. தாம் விரும்பியவற்றை அடையாமல் போனவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும் என பாரதியார் கூறுகின்றார் .**